# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 16 ஞாயிற்றுக்கிழமை (29.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 131



RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து


# கொழும்பில் மீண்டும் விமானப் பீதி

பிந்திய செய்தி

## இன்று அதிகாலை சம்பவம்

(கொழும்பு)

இரத்மலானை விமான நிலையத்தை அண்டிய பகுதியில் இன்று அதிகாலை 1.45 மணியளவில் விடுதலைப்புலிகளின் விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக உத்தியோகப் பற்றற்ற செய்திகள் தெரிவித்தன.

இன்று அதிகாலை 1.30 மணியளவில் புத்தளம் பகுதியூடாகச் சென்ற விடுதலைப் புலிகளின் இரண்டு விமானங்களே இத் தாக்குதலை மேற்கொண்டதாக கூறப்பட்டது.

இதேவேளை சம்பவ நேரத்தில் வானில் ஒளிப் பிழம்புகள் தோன்றியதாகவும் குண்டுச் சத்தங்கள் பரவலாகக் கேட்டதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. தாக்குததல் சம்பவத்தையடுத்து கொழும்பு நகரம் முழுவதிலும் மின்சாரம் தடைப்பட்ட தாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கிளிநொச்சி நோக்கி இன்று அதிகாலை 2.15 மணியளவில் இரண்டு விமானங்கள் சென்றதாகவும் அவ் விமானங்களை விமானப்படையின் இரண்டு ஹெலிகொப்டர்கள் துரத்திச் சென்றதாகவும் சூரியன் எவ்.எம்.வானொலி செய்தி வெளியிட்டது. இதேவேளை இன்று அதிகாலை விசுவமடுப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் மீது கிபீர்விமானங்கள் எட்டுக் குண்டுகளை வீசியதை அடுத்தே கொழும்பில் விடுதலைப்புலிகளின் விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக வன்னித்தகவல்கள் தெரிவித்தன. (எ)

# அரசுக்கு எதிராக செயற்படுவோரை கைது செய்யும் அரசியல் தொடர்கிறது

## குரோசியாவில் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கு எதிராகச் செயற்படுபவர்கள் மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவர்களை கைது செய்து சிறையில் அடைக்கும் அரசியல் இலங்கையில் நடக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.சர்வதேச ஜனநாயக சார்க் மாநாட்டில் கலந்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அணிக்கு வெற்றி இலக்கு 269 ஓட்டங்கள்

அவுஸ்திரேலிய 36 ஓவர்களில் 269 ஓட்டங்களை இலங்கை அணிக்கு நிர்ணயித்துள்ளது. உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் நேற்று மழை குறுக்கிட்டதனால் ஆட்டம் 38 ஓவர்களுக்கு குறைக்கப்பட்டுள்ளது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 38 ஓவர்களில் 281 ஓட்டங்களைப் பெற்றது. அடம் கில்கிறிஸ்ற் 104 பந்துகளில் 149 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை 32 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 194 ஓட்டங்களை பெற்று போராடிக் கொண்டிருந்தது வெற்றி வாய்ப்பு அவுஸ்திரேலியாவுக்கு உள்ளது. (ச-5)

## காஸ் நிறுவனத்தில் அதிகாலை தீ விபத்து

(கொழும்பு)

கொழும்பு முத்துராஜவெலப் பகுதியில் உள்ள காஸ் நிறுவனம் ஒன்றில் இன்று அதிகாலை வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது.

இவ் விபத்தினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் எவையும் உடனடியாக வெளியாகவில்லை. சம்பவ இடத்தில் தீயணைப்புப் பிரிவினர் தீயை அணைக்க போராடி வருவதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

## தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் எறிகணைத் தாக்குதலில் உயிரிழப்பு

### யாழ்.குடா கடற்பரப்பில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவர் எறிகணைத் தாக்குதலில் சிக்கி உயிரிழந்தார். இச் சம்பவம் நேற்றுக் காலை 9.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. யாழ்.குடா கடற் பரப்பில் கடந்த இரு வாரகாலமாக மீன்பிடிப்பதற்கு இராணுவத்தினரால் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் நேற்று மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் பாசையூர், கொழும்புத்துறை பகுதிகளைச் சேர்ந்த சுமார் 175 மீனவர்கள் (04 ஆம் பக்கம் பார்க்க)

## மீன்பிடிக்கும் பிரதேசத்தை இராணுவம் மட்டுப்படுத்தியது

(யாழ்ப்பாணம்)

மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு கடற்தொழில் செய்வதற் குரிய பிரதேசத்தை மட்டுப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் 512 ஆவது படைப்பிரிவு அறிவித்துள்ளது. இது தொடர்பாக 512 ஆவது படைப் பிரிவினால் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடும் வேளையில் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கமுடியாத நிலையில் சில சில சம்பவங்கள் இதற்கு முன் நடந்தமை பலரும் அறிவர். இதனால் (04 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நேற்று பெரும் பாதுகாப்புத் தேடுதல்

(கொழும்பு)

தலைநகர் கொழும்பில் விடுதலைப்புலிகளைத் தேடும் பெரும தேடுதல் நடவடிக்கையை பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டனர். பாதுகாப்புச் சோதனைச் சாவடிகளில் ஆயிரக்கணக்கான மக்களும் மற்றும் வாகனங்களும் நிறுத்தப்பட்டன.

16 பேர் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்றுக் காலை 7 மணி முதல் முற்பகல் 10 மணிவரை இச் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச் சோதனையின் போது 16 ஆயிரத்து 500 பேரும் 9 (04 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய துணைவேந்தர் நியமனம் குறித்து பல்கலைக்கழக பேரவை ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு புதிய துணைவேந்தரை நியமிப்பது தொடர்பாக நேற்று இடம் பெற்ற பேரவை கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. கடந்த வருடம் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தராக பேராசிரியர் இரட்ணஜீவன் கூல் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டிருந்தபோது தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தெரிவித்து கடமையினை பொறுப்பேற்கவில்லை. இந் நிலையில் பதில் துணைவேந்தராக பேராசிரியர் குமாரவடிவேல் கடமையாற்றி வந்தார்.

இந் நிலையில் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு புதிய துணைவேந்தராக நியமனம் செய்வது தொடர்பாக மூன்று பேரினை தெரிவு செய்து அவற்றினை அனுப்பிவைக்குமாறு மானியங்கள் ஆணைக்குழு கோரியிருந்தது.

இதன் அடிப்படையில் நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தின் (04 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளை தொடர்ந்து ஆதரிப்போம்

### வை.கோபாலசாமி உரை

(சென்னை)

விடுதலைப்புலிகளை என்றும் ஆதரிப்போம் ஆனால் தமிழ்நாட்டில் எந்த வன்முறையிலும் சட்டவிரோத செயல்களில் ஈடுபடமாட்டோம் என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

தமிழ் ஈழத்தில் விடுதலைக் கொடி பறக்கும் நாள் தொலைவில் இல்லை. தமிழீழ விடுதலைப்புலிகளின் விண்படை வான் புலிகள்,பலாலியில் முகாமிட்டுள்ள விமான தளத்தின் மீது வான்வெளித் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இலங்கைக்கு ரேடார்களைக் கொடுக்காதீர்கள். இராணு (04 ஆம் பக்கம் பார்க்க)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007 அனுசரணை

HNB PATHUM VIMANA 2007

இரு வாரங்களுக்கு
ஒரு தடவை
சுசுக்கி ஸ்விவ்ட் கார்
பரிசாகக் காத்திருக்கிறது.




இன்றே பணத்தை வைப்புச் செய்து வெற்றி வாய்ப்பினை அதிகரித்துக் கொள்ளுங்கள்

சேமிப்பு அல்லது சிங்கிதி கணக்கில் 10,000 ரூபாயை அல்லது நடைமுறைக் கணக்கில் 5,000 ரூபாயை குறைந்தபட்சம் ஒரு கலண்டர் மாதத்திற்கு மீதியாக வைத்திருந்து பரிசுகளை வெல்லுங்கள்!

மேலதிக விபரங்களுக்கு 011 2 661 971-5 அல்லது அருகிலுள்ள HNB வாடிக்கையாளர் நிலையத்துடன் தொடர்புகொள்ளுங்கள்

நிபந்தனைகள் அடங்கலாக

HNB

Sri Lanka Insurance

உண்மை உயர்ந்த சேவை
உச்ச பலன் அச்சமின்றி
நாடுங்கள் நாட்டின் சிறந்த
நண்பன்

SRI LANKA LIFE
வாழ்க்கைக்கு மதிநுட்பமான முதலீடு

ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸிடமிருந்து

PEOPLE'S BANK Vanitha Vasana
People's Bank JanaJaya Save for progress
PARINATHA Senior Citizens Account

உங்கள் எதிர்காலம் சிறக்க மக்கள் வங்கி
வழங்கும் சேமிப்புத் திட்டங்கள்

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
Isuru Udana
People's Bank Sisu Udana
Yes

ரண் கெகுளு
BOC
இலங்கை வங்கி

தேசத்தின் மலர்களைப்
போன்ற தங்கமான சிறுவர்
களின் எதிர்காலத்திற்காக
அவர்கள் மீதுஅன்பு செலுத்
துபவர்கள் ஆரம்பிக்கக்
கூடிய சிறுவர் வைப்பு
இதுவாகும்.

நீங்கள் செய்ய
வேண்டியது
என்ன?



இன்றே அருகிலுள்ள
இலங்கை வங்கிக்குப்
போங்கள்


# பின்னுறுதித் தீர்வை

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

சிவானந்தன் பெண் யமீலா
தியேட்டர் வீதி,
இனுவில்.

வழக்காளி

வழ.இல.மணநீக்கம் /731

எதிராக

தில்லையம்பலம் சிவானந்தன்
ஆச்சிரம வீதி,
இனுவில் கிழக்கு,
இனுவில்.

எதிராளி

இவ்வழக்கு 2006 ஆம் ஆண்டு மார்கழி மாதம்01 ம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவு பெற்ற சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராஜாவும் அவர்களும் பிரசன்னமாயிருக்க எதிராளிக்கு அழைப்புக் கட்டளை 24.11.2006 ஆம் திகதிய வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரித்து பதில் சேவகம் செய்யப்பட்டு திரும்பல் திகதியான 30.11.2006இல் எதிராளி மன்றில் சமுக மின்மையால் இவ்வழக்கு இன்று ஒருமுக விளக்கத்திற்கு நிர்ணயிக்கப்பட்டதற்கமைய இன்று இவ்வழக்கின் வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த வழக்காளியின் சட்டத்தரணி மன்றில் அனுமதியைக் கோரி மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியத்தையும் வழக்காளியின் தந்தை முத்தையா இராசேந்திரத்தின் சாட்சியத்தையும் நெறிப்படுத்திய பின்னர் இவ்வழக்கில் அளிக்கப்பட்ட சாட்சியத்தில் இருந்து வழக்காளியின் திருமணவாழ் இல்லத்தில் எதிராளியுடன் தொடர்ந்து வாழ முடியாத ஒரு சூழ்நிலையும், எதிராளி தன்னை அடித்ததாகவும் இன்னொரு பெண்ணுடன் தொடர்பு இருந்ததினால் அவவையும் கூட்டிக் கொண்டு வந்து வீட்டில் வைத்து இருக்கக் கேட்டதாகவும் அதனால் பிரச்சினை ஏற்பட்டதாகவும் எதிராளியின் குடும்பத்தினர் வழக்காளியைக் கவனிக்காமல் வந்துள்ளதும் இந் நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் இங்கே அமைய நிலையான வன்ம உறவறுப்பு உள்ளது என்ற குற்றம் எதிராளியினால் புரியப்பட்டு வந்துள்ளது என்பதற்கு திருப்தியான சாட்சி என்பன சான்றுகளாக அமைகிறது என்ற அடிப்படையில் பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 04 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட பதிவுத் திருமணம் இத்தால் இரத்துச் செய்து கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளி தனது கன்னிப் பெயரை முற்றான தீர்வை பதியப்பட்ட பின்னர் தொடர்ந்தும் பாவிக்கலாம் என கட்டளையிடப்படுகின்றது.

இப் பின்னுறுதித் தீர்வையின் பிரதி எதிராளிக்கு சேவிக்கப்பட்டோ அல்லது பத்திரிகையில் பிரசுரம் செய்து பதில் சேவகம் செய்யப்பட்டோ சேவகம் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03மாத காலத்திற்குள் எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறும்பட்சத்தில் விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப்பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமென கட்டளையிடப்படுகின்றது.

2006 ம் ஆண்டு மார்கழி மாதம் 01 ம் திகதி

வரைந்தது
லிங்கா துரைராஜா
வழக்காளியின் சட்டத்தரணி

மேலதிக மாவட்ட நீதிபதி
திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன்
யாழ்ப்பாணம்

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

(866)

# கண்ணீர் அஞ்சலி

## வயிரவன் நடேசன்

எம் சக ஆசிரிய நண்பன் அருந்தவராசா அவர்களின் அன்பு மாமனாரும், எமது பாடசாலை முன்னாள் ஆசிரியருமான மறைந்த பேராசான் வயிரவன் நடேசன் அவர்களுக்கு எம் இதய பூர்வமான அஞ்சலியைத் தெரிவிப்பதோடு துயருறும் குடும்பத்தினருடன் எம் கவலையையும் பகிர்ந்து கொள்கின்றோம்.

அதிபர்களும் ஆசிரிய நண்பர்களும்
யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.
சாவகச்சேரி

(869)

## அந்தணர் தேவை

மண்டைதீவு சிறுப்புலம் அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணிய தேவஸ்தானத்தில் தினசரி காலை மட்டும் பூஜை செய்வதற்கு அந்தணர் ஒருவர் உடனடியாகத் தேவை. மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசி முடிவு செய்யப்படும்.

-தேவஸ்தானம்.

(c-034)

## மணவறை விற்பனைக்கு

புதிய மணவறை உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
எஸ்.தயா,
இணுவில் சந்தி,
இணுவில்.

(867)

# விமானத் தாக்குதலை எதிர்கொள்ள புதிய திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது

## விமானப் படைப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதலை எதிர்கொள்வதற்காக விசேட வான்பாதுகாப்புத் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் புலிகளின் விமானங்களைத் தாக்கியழிப்பதற்காக இலங்கை விமானப் படையினர் எந்நேரமும் தயாராகவேயிருக்கின்றனர் என்று விமானப் படைப் பேச்சாளர் குறூப் கப்டன் அஜந்த சில்வா தெரிவித்தார்.

புலிகளிடம் இருப்பதாகக் கூறப்படுகின்ற இலகு ரக விமானங்களை தாக்கியழிப்பதற்கு இலங்கை விமானப் படையினர் எந்நேரமும் தயாராகவே இருக்கின்றனர்.

நாட்டில் எந்தப் பகுதி வான்பரப்பிலாவது சந்தேகத்திற்கிடமான விமானங்கள் பறப்பதை அவதானித்தால் மக்கள் உடனடியாக 116 என்ற தொலைபேசி இலக்கத்தோடு தொடர்பு கொண்டு அறிவிக்குமாறும் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

கட்டுநாயக்கா விமான நிலையத்தை அண்மித்த பகுதிகளுக்கு விடுதலைப்புலிகளின் இலகு ரக விமானம் வியாழக்கிழமை இரவு வரவில்லை.

எனினும் புலிகளின் விமானங்களைத்தாக்கியழிப்பதற்கான சகல நடவடிக்கைகளும் விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டின் தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு சந்தேகத்திற்கிடமான விமானங்களைத்தாக்கி அழிப்பதற்கு இலங்கை விமானப் படையினர் எந்நேரமும்தயாராகவேயிருக்கின்றனர்.

சந்தேகத்திற்கிடமான விமானங்கள் கட்டுநாயக்கா விமான நிலையதை அண்மித்த பகுதிகளுக்கு வருவதாகக் கிடைத்த தகவல்களையடுத்து மேற்கொள்ளப்பட்ட தன்னியக்கத் தாக்குதலால் விமான நிலையத்திற்கோ விமானப்படைத் தளத்திற்கோ எவ்விதமான சேதங்களும் ஏற்படவில்லை.

அத்துடன் சந்தேகத்திற்கிடமான விமானங்களும் எவ்வித மான தாக்குதல்களையும் மேற்கொள்ளவில்லை என்றார். (ச-5)

# திருவிழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை புனித யூதா ததேயு திருவிழா இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகும். நேற்று மாலை 3.40 மணிக்கு திருச்செபமாலையுடன் நற்கருணை வழிபாடு இடம் பெற்றது. (ச)

பிறர் நலத்துக்காக பாடுபடுவதுபோல் நடிக்காதீர்கள். உண்மையிலேயே பிறர் நலத்துக்குப் பாடுபடுங்கள். பிறர் நலத்துக்குச் செய்யும் தொண்டு பிறவிப் பயன்தரும்.

—சுவாமி இராமதாசர்

வலம்புரி

# இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் இருவேட நிலை

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் இருவேட நிலை, நிலைமையை மிகவும் மோசமாக மாற்றவுள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியா பொறுப்புடன் செயற்படுமென இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் சந்திப்பின்போது கூறியிருந்தார். எனினும் பிரதமர் மன்மோகன் சிங்கின் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சந்திப்பில் இலங்கை இனவிவகாரத்தில் இந்தியா தலையிட்டு தமிழர்களின் உரிமையைப் பாதுகாக்கும் என பிரதமர் மன்மோகன் சிங் கூறியிருந்தாலும், அதேகாலப் பகுதியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி செய்தியாளர் மாநாடு ஒன்றில் இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடக் கூடாதெனக் கூறியிருந்தார்.

இதிலிருந்து இந்தியப் பிரதமரும் வெளியுறவுத்துறை அமைச்சரும் இருவேடத்தில் நாடகம் நடிக்கின்றனர் என்பது புலனாகின்றது.

இந்தியாவின் இரட்டை வேட நிலை மற்றும் இலங்கைத் தமிழர் மீதான அக்கறையீனம் என்பவற்றுக்குப் பிரதமர் மன்மோகன் சிங்குடனான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சந்திப்பைக் குறிப்பிடலாம்.

அதாவது இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியாவுக்குச் சென்றிருந்தனர்.

இந்தியாவுக்குச் சென்ற கூட்டமைப்பினர் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வை.கோபாலசாமியுடன் தங்கி நின்றனர்.

வை.கோபாலசாமியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தங்கியிருக்கின்றமை தமிழக முதல்வர் கருணாநிதிக்குத் திருப்தியைத் தரவில்லை.

இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் சந்திப்பை ஏற்படுத்த வேண்டாமென கலைஞர் கருணாநிதி, பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கேட்டுக் கொள்ள, பிரதமர் மன்மோகன் சிங் கலைஞரின் வேண்டுதலை தாண்டாமல் சந்திப்பை நிறுத்தி விட்டார்.

பின்னர், கலைஞர் கருணாநிதியுடன் கூட்டமைப்பினர் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட பின்னரே, பிரதமர் மன்மோகன் சிங்குடனான சந்திப்பு சாத்தியமாயிற்று.

அவ்வாறாயின் இலங்கைத் தமிழர்கள் மீது இந்தியாவுக்கும், இந்தியப் பிரதமருக்கும் அக்கறையில்லை என்ற முடிபை நாம் எடுக்க முடியும்.

இலங்கைத் தமிழர்களின் விவகாரத்தில் இந்தியாவுக்கு அக்கறையிருந்திருக்குமாயின் கருணாநிதியின் வேண்டுதலை மீறி பிரதமர் மன்மோகன் சிங், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்திருப்பார். இதிலிருந்து இந்தியாவின் இரட்டை வேடம் அம்பலமாகின்றது.

# தரம் 10 தமிழ்மொழிப் பாடநூல் மாணவர்களுக்கு ஏற்றதாகவில்லை

## ஆசிரியர்கள் புகார்

தமிழ்மொழியும் இலக்கியமும் தரம் பத்திற்கான பாடநூல் விடய உள்ளடக்கம் தொடர்பாக பரந்த அளவில் விசனம் தெரிவிக்கப்படுவதுடன் அது தொடர்பாக மதிப்பீட்டு ஆய்வுகளும் நடைபெற்று வருகின்றன. தரம் -10 வகுப்பு மாணவர்களுக்கென கல்வி வெளியீட்டு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தமிழ் மொழியும் இலக்கியமும் பாடநூல் அவ் வகுப்பின் தரத்திற்கு ஏற்புடைய விடயதானங்களை கொண்டிருக்கவில்லை என ஆசிரியர்கள் மற்றும் கல்வியியலாளர்களால் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கும் தேசிய கல்வி நிறுவனத்திற்கும் புகார் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்கான நூல் தரம் -10 வகுப்பு மாணவர்களுக்கு இந்த வருடம் அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்திற்கு அமைய கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டு பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. முதலாம் தவணை நடுப்பகுதியில் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட இப் பாடநூலில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதாக பிராந்திய ரீதியில் மதிப்பீட்டு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தரம் 10 மாணவர்களுக்கான தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திட்டம் தேசிய கல்வி நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு அது தொடர்பான ஆசிரியர் வழிகாட்டியும் வெளியிடப்பட்டுள்ள போதிலும் பாடப் புத்தகம் பாடத்திட்ட உள்ளடக்கத்திலிருந்து விலகிச்செல்வதோடு ஆசிரியர் வழிகாட்டியில் உள்ளவாறு விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# சிறார் படைச் சேர்ப்புக் குறித்து கருணா குழு கவலை கொள்வதில்லை

## ஐக்கிய நாடுகள் சபை குற்றச்சாட்டு

கருணா குழுவினர் சிறுவர்களைப் படையில் சேர்ப்பதில்லை என கூறிய உறுதிமொழிகளை ஒருபொருட்டாக மதிப்பதில்லை, இந்த ஆயுதக்குழுவுக்கு அரசின் ஆதரவு முழுமையாக உண்டு எனப் பரவலாக நம்பப்படுகின்றது என ஐக்கிய நாடுகள் சபையின் சிறார் பாதுகாப்பு அமைப்பான யுனிசெவ் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் கருணா குழுவினரின் நடமாட்டங்கள் உள்ள பகுதிகளில் சிறார்கள் படைகளில் பயன்படுத்தப்படுகின்றனரா எனச் சோதனைகள் நடாத்துவதற்காகக் கடந்த வாரம் யுனிசெவ் தனதுகுழுவை அனுப்பியிருந்தது. இது தொடர்பில் யுனிசெவ் பேச்சாளர் அன்றூ புறூக்ஸ் தெரிவித்துள்ளதாவது,

எமது குழுவின் இந்த நடவடிக்கை காட்டுப்புறப் பகுதியை நோக்கியதாக இருந்தது. எனினும் அவர்களின் முகாமைப் பார்வையிடுவதற்கான அனுமதியை கருணா குழு யுனிசெவ் குழுவுக்கு வழங்கவில்லை. காலதாமதம், தடைகள், தவறான தகவல்கள் மூலம் எமது பணிகளை கருணா குழுவினர் தடுத்துவிட்டனர் என்றார். (ச-5)

# மட்டக்களப்பில் இடம்பெயர்ந்த மக்களை ஜீலைக்கு முன்பாகக் குடியேற்ற நடவடிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தின் யுத்த அகதிகளாக இடம்பெயர்ந்திருக்கின்ற 32 ஆயிரம் குடும்பங்களையும் எதிர்வரும் மே மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் ஜுலை 31 ஆம் திகதிக்கும் இடையில் மூன்று கட்டங்களாக அங்கு மீளக்குடியமர்த்துவதென்று நேற்று நடைபெற்ற உயர் மட்ட மாநாடு ஒன்றில் முடிபு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு 23-வது படைப்பிரிவு தலைமையகத்தில் இடம்பெற்ற இம்மாநாட்டில் அமைச்சர்கள், மாகாண ஆளுநர், சிவில் மற்றும் படை அதிகாரிகள் எனப் பலதரப்பட்டவர்கள் கலந்து கொண்டனர். இவ் மீள்குடியேற்றம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே.மகேசன் தெரிவிக்கையில், .

எதிர்வரும் மே மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் இறுதிவரை முதற்கட்டக் குடியேற்றம் வெள்ளாவெளிப் பகுதியில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து பட்டிப்பளை, வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுகளிலே ஜூன் முதலாம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை இரண்டாம் கட்டக் குடியமர்வு நடைபெறவுள்ளதுஎன்றார். (ச-3)

# விமான எதிர்ப்புத் தாக்குதலால் கட்டுநாயக்காவில் ஏற்பட்ட அவலம்

இலங்கை வான்படைத் தளத்தின் மீது கடந்த வியாழக்கிழமை இரவு விடுதலைப் புலிகள் வான்தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் காரணமாக அதன் அருகிலிருந்த அனைத்துலக வானூர்தி நிலையம் அவசரமாக மூடப்பட்டது. அப்போது வான்படையினரின் சரமாரியான வானூர்தி எதிர்ப்புத் துப்பாக்கி வேட்டுக்களால் அங்கிருந்த பயணிகள் அச்சமடைந்து சிதறியோடியுள்ளனர்.

பயணிகள் செல்லும் பகுதியில் பெரும் சத்தங்களும் நெருக்கடிகளும் ஏற்பட்டதுடன் பெண்களும் ஆண்களும் சிறுவர்களும் வானூர்தியில் ஏறும் பகுதிகளில் இருந்து சிதறி ஓடி பயணிகளை பரிசோதனை செய்யும் பகுதிக்குச் சென்று பாதுகாப்புத் தேடியதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்னர்.

இடிமுழக்கம் போன்ற சத்தம் ஒன்று கேட்டபோதும் காத்திருந்த பயணிகள் அதற்குப் பெரியளவில் கவனம் செலுத்தவில்லை. ஆனால் அதனைத் தொடர்ந்து தொடர்ச்சியான குண்டுச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டு ஒலிகளும் சரமாரியாகக் கேட்கத் தொடங்கின. அதனைத் தொடர்ந்து பயணிகள் அச்சமடைந்ததுடன் சிதறிஓடத்தொடங்கினார்கள் என்றும் பயணி ஒருவர் தெரிவித்தார்.

எனினும் பெரும்பாலான பயணிகள் தமது பயணப் பைகளை தம்முடன் எடுத்துக் கொண்டு ஓடிய போதும் சிலர் தமது பயணப் பைகளை தவறவிட்டிருந்தனர். இது தொடர்பாக பயணி ஒருவர் தெரிவித்ததாவது,

குண்டுச் சத்தங்கள் 10.45 மணியளவில் கேட்கத் தொடங்கின. தாக்குதல் நடக்கிறது ஓடுங்கள் என வானூர்தி நிலையத்தின் பாதுகாப்பு அதிகாரி சத்தமிட்டார். பயணிகள் செல்லுமிடத்தில் நின்ற பாதுகாப்பு அதிகாரிகள் பயணிகளைப் பாதுகாப்பாக ஒதுங்குமாறு கேட்டுக் கொண்டனர்.

ஒரு பாதுகாப்பு அதிகாரி தனது அறையைப் பூட்டிவிட்டு இருந்துவிட்டார். தாக்குதல் அச்சம் நீங்கும்வரை அவர் வெளியில் வரவில்லை. வானூர்தி நிலையத்தின் மின் விளக்குகள் அணைக்கப்பட்ட போது மிகவும்பெரும் அச்சத்திற்கும் பீதிக்கும் பயணிகள் உள்ளாகினர் என்றார் அவர்.

அனைத்துப் பயணிகளும் தமது உறவினர்கள், நண்பர்களுக்கு தொலைபேசி அழைப்புக்களை எடுக்க முயற்சித்ததனால் தொலைபேசி இணைப்புகளும் செயலிழந்து போயிற்று. இதனால் பயணிகளிடம் மேலும் அச்சமும் பீதியும் ஏற்பட்டது. எனினும் அரை மணி நேரத்தில் நிலைமை வழமைக்குத் திரும்பியதுடன் பயணிகளைத் தமது பகுதிகளுக்குத் திரும்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

ஆனால் டுபாய்க்குப் பயணமாகவிருந்த எமரேஜ் வானூர்தி நிறுவனத்திற்குச்சொந்தமான வானூர்தி சேவை இரத்துச் செய்யப்பட்டது. சிங்கப்பூருக்குப் புறப்படவிருந்த கதேபசுபிக் வானூர்தி ஒரு மணி 30 நிமிடங்கள் தாமதமாகப் புறப்பட்டது. ஆகையால் பயணிகளுக்கு வானூர்தி நிலைய கார்டின் விடுதியில் தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஜோசப்பாலா எழுதிய 'உள மார...' நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் பிற்பகல் 3 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத் தூது அழகியற்கல்லூரி மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

யாழ்.கலைத்தூது அழகியற் கல்லூரி அதிபர் திருமதி பி.எவ். சின்னத்துரை தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழகச் சமூகவியல்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சண்முகலிங்கனும் மதிப்பீட்டுரையை அரச சார்பற்ற நிறுவன ஒன்றியத் தலைவர் பேராசிரியர் வி.க.கணேசலிங்கமும் நிகழ்த்தவுள்ளனர். (ச)

# ஈஸ்வரம்மா தின விழா

(யாழ்ப்பாணம்)

ஈஸ்வரம்மா தினவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9மணிக்கு பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ச)

# சப்பற வெள்ளோட்ட விழா

(யாழ்ப்பாணம்)

உடுவில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வர சுவாமி தேவஸ்தான சப்பற வெள்ளோட்ட விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்று மாலை 3 மணிக்கு பெரிய சப்பறத் திருவிழா நடைபெறும். (ச)

# கொமர்ஷல் வங்கியின் அருணலு பரிசளிப்பு விழா

கொமர்ஷல் வங்கியின் யாழ். கிளையினர் நடாத்தும் அருணலு பரிசளிப்பு விழா நிகழ்வு யாழ்.கிளையில் எதிர்வரும் 2 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 25 மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (ச-3)

# சம்பளக் கொடுப்பனவு நாளை

துணுக்காய் கல்வி வலயத்தில் கடமையாற்றி தற்போது யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கான பெப்ரவரி மற்றும் மார்ச் மாதத்திற்கான சம்பளம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் யாழ்.கல்விவலயத்தில் வழங்கப்படவுள்ளதென யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ச-3)

# அம்பாறையில் தேடுதல்

அம்பாறையில் நேற்றுக் காலை 6.30 மணிக்கு விநாயகபுரம் கிராமத்தில் சிறப்பு அதிரடிப் படையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இத் தேடுதல் நடவடிக்கையின் போது வீடுகளில் சல்லடையாகத் தேடுதல் செய்யப்பட்டன. 25ற்கும் மேற்பட்ட பொதுமக்களை அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

அதன் பின்னர் முற்பகல் 10 மணியளவிலேயே பொதுமக்களை விடுதலை செய்துள்ளனர் என அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (ச)

# குருப்பட்டம் வழங்கும் நிகழ்வு

மண்டைதீவு சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்களின் புதல்வர் சபாரட்ண சர்மாவுக்கு காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இன்று காலை 9 மணிமுதல் 11 மணிவரையுள்ள சுபவேளையில் குருப்பட்டம் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வை யாழ்.மாவட்ட இந்துமத குருபீட யாழ்.கிளையைச் சேர்ந்த சிவஸ்ரீ நித்தியானந்தர் குருக்கள் நடாத்தி வைப்பார். நிகழ்வில் காரைநகர் மணற்காட்டு முத்துமாரி அம்மன் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ ஞானசம்பந்தக் குருக்கள் கலந்து கொள்வார். (ச-248)

# சுதந்திரக் கட்சியின் தீர்வு திட்டம் அடிப்படை அற்றது

## ஐக்கிய தேசியக்கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் பிரதான அரசியல் கட்சியான சுதந்திரக்கட்சி மாவட்ட சபைகளுக்கான அதிகாரங்களை தீர்வுத்திட்டமாக முன்வைக்கும் போது ஐக்கிய தேசியக் கட்சி மாகாண சபைகளின் அதிகாரங்களை வலுப்படுத்துமாறு தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தின் இந்த மாவட்ட சபைத் திட்டத்தில் எந்த ஒரு மாவட்டமும் சீராக அபிவிருத்தி அடைய முடியாது என ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் அரசியல் யாப்பு விவகார நிபுணருமான கே.என்.சொக்சி தெரிவித்துள்ளார்.

அதிகூடிய அதிகாரங்களுடன் மாகாண சபைகளை ஐக்கிய தேசியக் கட்சி ஏன் பிரேரித்துள்ளது என்றால் அதற்கு இது தான் காரணம் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இணைக்கப்பட வேண்டும். அதன் பின்னர் இந்த இணைப்பு தொடர்வதா வேண்டாமா என கிழக்கு மாகாண மக்கள் வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கட்டும்.

மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு சீரானது. ஆனால் சில மாகாணங்களின் சிறப்பு தேவைகளையும் அது கருத்தில் கொள்ளல் வேண்டும். இது இணைக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் பொருந்தும் என அவர் தெரிவித்தார். (ச-5)



நேற்று கொழும்பில் இடம் பெற்ற பாரிய வீதிச்சோதனையின் போது பெண்மணி ஒருவர் இராணுவத்தினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டபோது...

# அரசுக்கு எதிராக செயற்படுவோரை...

இலங்கையில் கடத்தல் மற்றும் காணாமல் போதல் போன்ற சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதுடன் மனித உரிமை மீறல்களும் ஜனநாயகத்திற்கு எதிரான நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன.

மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்காக ஐக்கிய தேசியக்கட்சி மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகம் ஆதரவு வழங்கவேண்டுமென்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குரோசியா பிரதமர் ஐ.வோ. செனட்டரினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச ஜனநாயக சங்க மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்த மாநாட்டில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தேசிய ஒருமைப்பாடு மற்றும் ஜனநாயகத்திற்கு எதிரான நடவடிக்கைகளை தோல்வியடையச் செய்து ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை அழித்து குடும்ப நிர்வாகத்தை மேற்கொள்வதற்கு முயற்சி செய்து வருகிறது.

இலங்கையில் ஒவ்வொரு நாளும் கடத்தல் மற்றும் காணாமல் போதல் போன்ற சம்பவங்கள் இடம் பெறுகின்றன. தொழிற் சங்கங்கள் மற்றும் ஊடக நிறுவனங்களைச் சேர்ந்தவர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவற்றுக்கு எதிராக செயற்படுகின்றவர்கள் மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவர்களை கைது செய்து சிறையில் அடைக்கும் அரசியல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்தவர்களை மட்டுமல்லாது ஏனைய கட்சி உறுப்பினர்களும் இவ்வாறானதொரு அசாதாரண சூழ்நிலைக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இந்த ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் மக்கள் உரிமைகளைப் பாதுகாக்கவும் ஐக்கிய தேசியக்கட்சி தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது என்றார். (ச-4)

# காணாமல்போன தமிழக மீனவர்கள் 12 பேர் புலிகள் வசம் உள்ளனர்

## தமிழகச் செய்திகள் தெரிவிப்பு

காணாமல் போன குமரி மாவட்டத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் உட்பட 12 தமிழக மீனவர்கள் விடுதலைப்புலிகளிடம் இருப்பதாக தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த 10 ஆம் திகதி மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களோடு இலங்கையைச் சேர்ந்த 6 பேர் கரைக்குத் திரும்பினர்.

அவர்களை கடலோரக் காவல் படை விசாரித்தது. விசாரணையில் அவர்கள் 6 பேரும் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த கடற்புலிகள் என்று தெரிய வந்தது. அவர்களிடம் மேலும் விசாரித்ததில் காணாமல் போன 12 தமிழக மீனவர்களும் விடுதலைப்புலிகளிடம் இருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்தது என தமிழகச் செய்திகள் தெரிவித்தன. (ச-5)

# விடுதலைப்புலிகளை...

வத்தினருக்கு வான்வெளிப் பாதுகாப்பும் கொடுக்காதீர்கள் என்று சொன் னோம். சாட்டை செய்யவில்லை இந்திய அரசு. இந்திய ரேடார்கள் பற்றி குறை சொல்கிறார்கள். ரேடர்களில் குறை இல்லை. அதன் வேவுக்கண்களிலும் மண்ணைத் தூவும் விஞ்ஞானத் தொழில் நுட்பத்தை புலிகள் தாங்களாகவே உருவாக்கியுள்ளனர்.

தேவைதான் கண்டுபிடிப்புக்கு அடிப்படை என்கிறது அறிவியல். ஈடு சொல்ல முடியாத அறிவுக் கூர்மையும். மதிநுட்பமும்.சிந்தனைத் திறனும் செயல் ஊக்கமும் கொண்ட புலிகள் தாங்களாகவே படை அணிகளைத் தயாரித்தனர்.

தமிழீழ விடுதலை யுத்தத்தில் இறுதிப் போர் நெருங்கி வருகிறது. இப்போரில் புலிகள் வெல்வர். தமிழீழம் மலரும். தரணியின் வரைபடத்தில் ஒரு புதிய நாடு உருவாகும்.

இயக்கம் தொடங்கியதிலிருந்து அண்ணா ஊட்டிய தமிழ் இன உணர்வின் வழியில் தமிழீழ விடுதலையை ஆதரித்து வருகிறோம் என வை.கோபாலசாமி மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

# மீன்பிடிக்கும்...

கடந்த 17 ஆம் திகதியில் இருந்து இராணுவத்தினரால் கடற்றொழிலுக் குச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டது. இந் நிலையில் மீண்டும் நேற்று மீனவர்களுக்கு கடற்றொழில் செய்வதற்கு இராணுவத்தினரால் அனுமதி வழங்கப்பட்ட நிலையில் ஷெல் தாக்குதலில் மீனவர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இதனால் மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கடற்றொழில் செய்வதற்குரிய பிரதேசத்தை மட்டுப்படுத்த இராணுவத்தினர் தீர்மானித்துள்ளனர் என அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கொழும்பில்...

ஆயிரம் வாகனங்களும் சோதனையிடப்பட்டுள்ளதாக ஊடகத் தகவல் மையம் தெரிவிக்கின்றது.

விடுதலைப்புலிகள் அமைப்பின் விமானத் தாக்குதல் குறித்த ஒரு அச்சம் காரணமாக கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை சிறிது நேரம் இலங்கை பாதுகாப்பு அமைச்சு மூடச்செய்த இரு தினங்களுக்குப் பிறகு இந்த மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சோதனையின் போது வாகனங்கள் அனைத்தும் சல்லடை போட்டுத் தேடப்பட்டதுடன் ஒவ்வொருவரும் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-3,5)

# தொழிலில் ஈடுபட்டிருந்த...

84 படகுகளில் தொழிலுக் குச் சென்றனர்.

அவர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் எங்கிருந்தோ வந்த எறிகணை வெடித்துச் சிதறியதில் ஒருவர் உயிரிழந்தார். அவருடன் உதவியாளராகச் சென்ற மற்றொருவர் உயிர்தப்பியுள்ளார். இச் சம்பவத்தில் புதுவீதி கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இராஜப்பு ஜோசப் (வயது 52) என்ற மீனவரே உயிரிழந்தவராவார்.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேலதிக நீதிவான் சறோஜினி இளங்கோவன் மேற்கொண்டார். இதேவேளை விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலேயே அம் மீனவர் உயிரிழந்ததாக பலாலி படைத்தலைமையகம் அறிவித்துள்ளது.

எனினும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட எறிகணையே வீழ்ந்து வெடித்ததாக இச் சம்பவ நேரம் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-3,5)

# புதிய துணைவேந்தர்...

புதிய துணைவேந்தர் பதவி வெற்றிடத்திற்கு எவ்வாறு விண்ணப் பங்கள் கோருவது தொடர்பாக யாழ்.பல்க லைக்கழக பேரவை கூடி ஆராய்ந்து அதன் படி துணைவேந்தர் பதவிக்கு புதினப் பத்திரி கைகள் ஊடாக விண்ணப்பம் கோருவதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட் டது.

இதேவேளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 31 மே 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற அதனது 711 ஆவது கூட்டத்தில் உயர் கல்விநிறுவனங்களுக்கு உப வேந்தர் நியமனம் தொடர்பாக புதிய நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமென அறிவிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி தினப்பத்திரிகைகளில் பிரசுரமாகும் அறிவித்தல் மூலம் மேற்படி பதவிக்கான விண்ணப்பம் நியமனம் செய்யப்பட வேண்டும்.

இதற்கென அமைக்கப்படும் பொருத்தமான ஆய்வுக் குழு பேராசிரியர் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தினரான மூன்று சிரேஷ்ட கல்விமான்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். தகுதிவாய்ந்த ஒருவரை விண்ணப்பிக்கச் செய்வதற்கு குறித்த ஆய்வுக்குழுவில் குறைந்தபட்சம் பல்கலைக்கழகடீன் உறுப்பினராக இருக்க வேண்டும் போன்ற புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. (து-3)


திருமணக்கார் (குளிரூட்டியது) வாடகைக்கு

- திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
- விசேட வைபவங்கள்
- சுற்றுலாக்கள் போன்ற அனைத்துச் சேவைகளுக்கும், புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்டு)

குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்

தொடர்பு ரட்ணம்,
சோமசுந்தரம் அவன்யூ. சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
T.P: 0777903090,0777246117

நிதான விலையில் விற்பனை

எம்மால் புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து பிடவை தினுசுகளும் திருமணப் பட்டுப் பிடவைகளும் நிதான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன என்பதை எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதோடு ரூபா 15 000 /= ற்கு கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு ஒரு மக்ஸி துணி அன்பளிப்பாக வழங்கப்படுகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ
இல. 13, 14, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.
(031)

Tally
Diploma in Computerized Accounting
CB Computer Academy
Station Road, Kondavil. ☎:-021-4590291

புதிய பிரிவுகள் ஆரம்பம்!
இன்றே இணையுங்கள்!!
Certificate in Internet & E-Mail
Only 10 Hours
CB Computer Academy
Station Road, Kondavil. ☎:-021-4590291


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.04.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.